449

ஆலந்தூர் ஒரிஜனல் இந்து டிராமா
கம்பெனியிலும் சகல கம்பெனிகளிலும் நடத்திவருகிற

# லங்கா தஹனம்

12 OCT 1924



வித்வான், வே. நாராயணசாமி பிள்ளையால்
இயற்றப்பட்டு,

த. துரைசாமி முதலியாரால்
சென்னை புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1924.

*Registered Copy Right.*

விலை ] [ அணா-4.

C-892 NSI.4 N24 85680

மெடல்களை பரிசுபெற்றது! மெடல்களை பரிசுபெற்றது!

ஐக்கே நிபிரைத்தில்

## நரைமயிர் கருக்குந் தைலம்,

இதற்கு மிஞ்சின தைலம் உலகத்தில் கிடையாது.




தற்காலத்தில் பலவிதமாய்ச்செய்து விற்கப்பட்டு வருகிற சாயங்கள் மயிரைச் செம்பட்டைநிறமாகவும் பசுமைநிறமாகவும், சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி மயிரை விகாரப்படுத்திவிடுகின்றன. நம்முடைய தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 5-நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்னிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையு முண்டுபண்ணும்.

இதை உபயோகிக்குமிதம் பார்சலோடு வைத்துவரும்.

புட்டி 1-க்கு ரூபா 1.

## சர்வபடைகள் சங்காரன்.

இது சரீரத்தின் இடுக்குமான விடங்களாகிய அக்குள் தொடையின் இடுக்கு வஸ்திரம் கட்டும் இடமாகிய இடுப்பைச் சுற்றிலும் அடிவயிற்றிலும் சிறுக ஜனித்து வரவர விசேஷமாய் படர்ந்துபரப்பப்படுத்தி கஷ்டத்தை உண்டுபண்ணும்படியான மேகப்படை தடிப்படையென்று தென்தேசங்களில் வண்டுகடி என வழங்கும் இக்கொடிய வியாதிகளை சொறிசிரங்கு தேமல் முதலிய இதர சர்வ வியாதிகளையும் போக்கி மனதைக் களிக்கச் செய்யக்கூடிய அதிக அற்புத சுகந்த வாசனை உள்ளதும், 3-நாட்களுக்குள் மேற்கண்ட வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதுமான பத்தியமில்லாத மருந்து இதை படைமுதலியவைகளுக்கு மேலுக்குத் தடவ அதாவது உபயோகிக்க வேண்டியதே தவிர மற்றபடி உள்ளுக்குசாப்பிடவேண்டிய அவசியமில்லை.

1-அவுன்சு புட்டி அணா 8.

## மலசுத்தி லேகியம்.

இந்த லேகியத்தை 5-வயது குழந்தைகள் முதல் விருத்தாப்பியர் வரையில் பெண்கள் புருஷர்கள் யாவருந் தின்னலாம் தின்பதற்கு தகுந்த இனிப்பாயிருக்கும். இதனால் கைகால் குடைச்சல், கெர்ப்பவாய்வு மூலவாய்வு, அபானவாய்வு, குன்மவாய்வு எப்போதும் வயிற்றில் கோளாறுகளே யிருத்தல் மலச்சிக்கல் மலைசட்டி முதலான வயிற்றிலுள்ள எல்லா வியாதிகளையும் நிவர்த்தியாக்கும். மலச்சிக்கலில்லாமல அன்றாடம் கழிக்கும். 1-டப்பி விலை ரூபா 1.

T. சாரதா புத்தகசாலை,

நெ. 23, பாணியப்பன்தெருவு, மின்ட் பில்டிங் போஸ்ட், மதராஸ்.

ஸ்ரீராமஜெயம்.

ஆலந்தூர்

ஒரிஜினல் இந்து டிராமாடிக் கம்பெனி

பார்ஸீ

## பாலமோகன சங்கீத நடன சபா.

டி. ஆர் வெங்கடாசலபதி. கே. எஸ் கருப்பையா,
கே. கே. சுப்பையா கே குப்புசாமி டி. எம் மருதமுத்து
பி வேலு நாயகர், பைரவ சுந்திரம் பிள்ளை,
டி. ராஜாமணி ஜானகி ஜி எஸ் முனுசாமி நாயுடு
இவர்களால் நடித்துவரும்

அதி நூதன வர்ணமெட்டுகளுள்ள

# ஸ்ரீமத்ராமாயணம்

மாருதி விஜயம் அல்லது

# லங்கா தஹனம்.

இஃது

ஷை கம்பெனி உபாத்தியாயர்

ஸங்கீத ஸாஹித்திய சந்த சரபமஹா வித்வான்

வேலூர்

## நாராயணசாமிபிள்ளை

அவர்களா லியற்றப்பட்டு,

T சாரதா புத்தகசாலை,

த. துரைசாமி முதலியார்

அவர்களால்

சென்னை புவனேஸ்வரி பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

விலை] 1924 [அணா 4

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்குந் தெரிவிப்பதியாதெனில்,

ஸ்ரீமத் ராமாயணம், மாருதி விஜயம் அல்லது, லங்கா தஹனம் என்னும் புத்தகத்தை ஆலந்தூர் ஒரிஜினல் இந்டிராமாடிக்கம்பெனி உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ, வித்துவான் வேலூர் நாராயணசாமிபிள்ளை அவர்களால் எழுதினதை, த. துரைசாமி முதலியாராகிய எமக்கு சகல சுதந்திரம் கொடுத்து விட்டபடியால் எமது அனுமதி யில்லாமல் இதரமானவர்கள் எவ்விதத்திலாகிலும் அச்சிடலாகாதென கனம்பொருந்தியகவர்மெண்டார் சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் காப்பிரைட் செய்யப்பட்டிருக்கிறது,

இப்படிக்கு,

த, துரைசாமி முதலியார்,

T. சாரதா புத்தகசாலை,

நெ. 23, பூக்ளாப்பென் தெரு, மின்ட் பில்டிங் போஸ்டு, மதறாஸ்.

3

ஸ்ரீ

ஆலந்தூர்

# ஓரிஜினல் இந்து டிரமாடிக் கம்பெனி

## பார்ஸீ பாலமோகன சங்கீத நடன சபா

உபாத்தியாயர் மஹாவித்வான்

வேலூர்

நாராயணசாமி பிள்ளை யவர்களாற்பாடிய

# ஸ்ரீமத் ராமாயணம்

## மாருதிவிஜயம் அல்லது

# லங்கா தஹனம்.

காப்பு - வெண்பா.

சீரா ரவிகுலத்து ஸ்ரீராமன் சரிதையைப்
பேரார் நாடகமாய்ப் பேசுதற்கு—காரார்
தற்பரா போற்றினேன் சந்தோஷ மாகியே
இற்பரா காப்பாய் தினம்.

**1-வது சீன் கானகம்.**

(ஸ்ரீராமர் லக்ஷ்மணர் வருந்தினவராக வருகிறார்கள்)

ஸ்ரீராமர் தரு

ஜனபன்ஸி என்ற வர்ண மெட்டு.

கோமளப் பெண்மணியை யாரோ
கொண்டு போனரே கோ

கொண்டுபோகும்போது யானும்
அண்டையி லிருப்பே னாகில்
கண்ட துண்ட மாக்கிடுவேன்
காணே மென்செய்வேன் கோ

என்னென்ன தா — னெண்ணினளோ
ஏந்திழையாள் — போகும் போது
தன்னந் தனியாய் — வசடுவாளே
தயங்குதிவ் — வேளே — ளோ

தம்பி லக்ஷ்மணா! ராவணனென்னப்பட்ட அசுரன் கொண்டுபோனதாக ஜடாயு வென்பவரால் தெரிந்தோம். என்னசெய்வேன்! ஆ! வைதேஹி! எங்கிருக்கிறளோ! எக்கெதி யாகினளோ! அங்கு தனியாய் என்னென்னதா னெண்ணுகிறளோ! என்ன செய்வேன்! ஐயோ! என் நெஞ்சம் பதறுதே! அதோமிருகங்கள் கூட்டங் கூட்டமாய்ப்போகிறதுகளே அவைகளையாவது கேட்கலாம்.

## தரு.

### திமபின மோரி என்ற வர்ணமெட்டு

மான்களா கண்டீர்களா — மரகதசுந்தரியை
கான்குயில் மயில்களா — கண்டீர்களா — மா

கண்மணியைத்தேடி — கலங்கித்தயங்குகிறேன்
கண்டிருந்தாற் — சொல்லீரோ — மா

பக்ஷிகளினங்களா — பாவையைக்கண்டதுண்டா
இலக்ஷணமுரைப்பீர்கள் — மிருகங்களா
தக்ஷணந்தெரிவித்தால் — தாவியேசெல்லுவேன்
சாற்றுவீர் — விருக்ஷங்களா — மா

ஹா! மான்களா:—மிருகங்களா, மரங்களா, பறவைகளா, நீங்கள் யாரேனும், என் காதலியைக் கண்டதுண்டா, என்ன? அப்படி கண்டிருந்தீர்களே யாகில் எனக்குத் தெரிவியுங்களேன், அல்லது மார்க்கமாகிலும் தெரிவியுங்களேன், ஆ! வைதேஹி! நல்லது நாம் இவ்விதமாக வருந்தின வண்ணமாகவே யிருந்தால் யாதுபயன்? ஒன்றுமில்லை. அப்பா தம்பி! ஜானகியைத் தேடும்பொருட்டாக சரத்காலம் கழித்து வருகிறேனென்பதாகத் தெரிவித்துச் சென்ற சுக்ரீவன் இன்னும் வரக்காணேனே. என்ன ஆச்சரியம்! ஒருக்கால் வஞ்சனை எண்ணங்கொண்டு சென்றானோ, யாதோ ஒன்றும் விளங்கவில்லை, அப்பா தம்பி! நீ சென்று,

தரு.

சித்ரப்பச்சை என்ற வர்ணமெட்டு.

வருகிறானே வாரானோ சுக்ரீவன் அவன்
பணைதை யறிந்துவா தம்பி வரு

தருணம் உதவி செய்ததை
மறந்தானே மஹாபாவி
ஒரு நிமையிற் சென்று நீ
தெரிந்துவா நீ தாவி வரு

சரத் காலங் கழித்த வுடன்
வருகிறே னென்று சொன்ன
சத்திய மறந்தவனை
சித்ரவதை செய்தா லென்ன வரு

தம்பி! என்னகாரணமோ தெரியவில்லை, நீசென்று அதைத் தெரிந்துகொண்டு அழைத்துவா.

லக்ஷ்மணன்:—மகாபாக்கியம் அண்ணா! தாங்கள் ஆக்யாபித்த படியே அழைத்துக்கொண்டு வருகிறேன்.

---

## 2-வது சீன் மலைக்காடு.

வானர சைந்நியங்களுடன் சுக்ரீவனிருத்தல்.

சுக்ரீவன்:—ஆ! என்னசெய்வேன்! என்னகாரியம் செய்துவிட்டோம், சரத்காலங் கழித்து வருகிறேனென்பதாகத் தெரிவித்துவந்து சொல்தவறிவிட்டதே, ஸ்ரீராமத்ரோகியாய் விட்டேனே, நானே பாவி! கொடும்பாவி, மஹாபாவி, இதற்கெல்லாம் காரணம் அந்த மதுவல்லவா, இக்கெதிப்படனேரிட்டது, மெய்மறந்து விட்டோமே ஆஹா!

தரு:

மாரனே என்ற வர்ணமெட்டு.

மதுவே உன்தனைத் தொட்டேனே
மன மறியாமல் மது

அதிகமகிழ்வுடனே யகத்திலுட்கொண்டேனே
மதியும் சிதறிடவே கதறிடலாகினேனே மது

சாமிசெய்த கன்றியை
தக்ஷணம் மறந்தேனே
சண்டாளன் பாதகனான்
ராமத்ரோகி யாகினேனே மது

பாமரனா யுன்னையே
பலலேஷாக்காய் குடித்தேனே
பஞ்சமா பாதக னாய்
பாவியுன்னா லாகி னேனே மது

பித்தம் உடம்பிற்கு
மெத்தவுங் கேடு
பெண்தாயென்னும் பாராமல்
பேதையைப்போல் நாடு
குத்திரமாகும் நர
கத்தினிலே ஆடு
குடித்தவன் அடுத்தவன்
எடுத்தவன் நா ளீடு மது

ஹா! துஷ்டமதுவே உன்னைத் தொட்டதாலன்றோ இவ்வாறுவெ துயர்பட நேர்ந்தது: ஆ, என்னசெய்வேன்! இப்பேர்ப்பட்ட கெதி நேர்ந்ததே இதற்கெப்படி ஆ, ஸ்ரீசம்ப்ரபு!

(சுக்ரீவர் வருந்தும்சமயம் லக்ஷ்மணர் வருகிறார்.)

லக்ஷ்மணர் தரு.

சுந்தர ப்யாரி மைஹோரா என்ற வர்ணமெட்டு,

அண்ணைக் கொன்றனன்றோ
அரும் வினை நேர்ந்தது
அரும் வினை நேர்ந்தது
பெருமுடற சோர்ந்தது அ

மதனிவார்த்தைக் கேட்டன்றோ
மதிமோச மாச்சுது
மதிமோச மாச்சுது
சதிவசப் போச்சுது அ

ஆதரா என்னசெய்வேன், நம்மாலன்றோ நமதுசகோதாருக்கு இவ்வித துன்பம் நேர்ந்தது ஏன் அவர் தெரிவித்தபடிக்கே என் அன்னையைப் பாதுகாத்த வண்ணமாகத்தானே யிருந்தேனு யின் இப்படி நேரிடாதே பிறர் வருவரா! மதிமோசம் போனேனே மதுனிஒருவாறு கூறினதாலன்றோ இத்தகைய ஆபத்துக்குள்ளாகி அவ்வயநேர்ந்தது, என்னசெய்வேன்! தாமதிப்போமாயின் கெடுதிக்குள்ளாவோம் இதற்கேற்றாப்போல் சுக்ரீவனும் கூறினவாக்கு தவறி வாாமற்போய்விட்டானே! சென்று பார்ப்போம்! இதோ! சுக்ரீவனும் வருந்தின வண்ணமாய்ஒரு வாமுகவே யிருக்கின்றான் என்னகாரணமோ தெரியவில்லை.

சுக்ரீவர் :—வந்தனம் சுவாமி!

## லக்ஷ்மணர் தரு.

### ஆரடா என்ற வர்னமெட்டு.

இப்படி செய்தது ஞாயமா சுக்ரீவரே இ

சொற்படி கடந்து நீரும்
சும்மாயிருக்க லாமோ
எப்படி நம்புவ தினி
எதின் ஆகாது சூது வின் போகாது இ

மாரிகாலங் கழித்துமே
வாரேனென்ப தாகத் தனி
நீரும்வரத் தாமதித்தால்
வேறென்ன எண்ணுவ தினி இ

என்னதாமதம் கார்காலங் கழித்து வாரேனென்று சொன்னவர் இதுவரைக்கும் வாராத காரணம் என்ன! நீர் வாாமையால் சுவாமி சினந்து, என்னை உம்மிடம் அனுப்பினார்! என்ன தெரிவிக்கப்போகிறீர்.

சுக்ரீவர்:—பிரபு மன்னிக்கவேண்டும். நான்செய்த பிழையை மன்னித்து, என்னைக் காத்தருளவேண்டும் தயாநிதி! அடியேன் அறியாது மதுவினால்கெட்டேன்! ஆதரிக்கவேண்டும் சுவாமி!

லக்ஷ்மணர்:—அப்படியே! நீர்வாரும்! அண்ணாவை மன்னிப்புகேட்டுக்கொள்ளும் சுக்ரீவரே! காலஹரணம்செய்யாமல்விரைவாக வாரும்!

---

## 3 வது சீன் அடவி.

(ஸ்ரீராமர் முன் சுக்ரீவரும் லக்ஷ்மணரும் வருதல்.)

### சுக்ரீவன் தரு.

ஷாஹே பிலாதே என்ற வர்ணமெட்டு.

பாதாம்புஜம் சரணம் பகவானே ப

அதாசூரர்கள் மதத்தையொடுக்கும்
கதாயுதா சரணம் பகவானே ப

சிறியேனுன்செய்த சிறுபிழையெல்லாம்
பெரியோரே ரக்ஷிப்பீரே பகவானே ப

தெரியாமற்செய்த சேவையினைக்காரும்
தேவா கருணைவையும் பகவானே ப

சரணாரவிந்தங்களை வந்தித்தேன் அடியேன் அறியாமற்செய்தகுற்றத்தை க்ஷமிக்கவேண்டும் ஸ்ரீராமப்ரபு!

### ஸ்ரீராமர் தரு.

மருவே செறித்த என்ற வர்ணமெட்டு.

அடடா சுக்ரீவா கடடா பதமே
விடடா வழியைத் தொடடா போடா
கெடுவா யிதனால் படுவாய் வினைக
ளடமைத் தனமேன் அடடா மூடா அ

இனி நீ நின்றிடி லெனக்கே மிகவே
சினமே வந்திடும் றுனம் வருகாதே
தனியாய் விடுத்து மனம்போ லிருக்கும்
உனையே கருதேன் நினை சுக்ரீவா அ

நீ இவ்வாறு வாக்கு தவறுவாயென்று முன்னமே தெரிந்தேனாயின், உன்னோடுநேசம் புரியேன்! போதும்போதும் "அற்ப சகவாசம் பிராணஸங்கடம்" என்பதையும் கவனியாமல் உன்னை நம்பினேனே? அந்தோ! வாலியைக்கொன்ற அம்பைப்போல் எத்தனையோ அம்புகள் என்னிடமிருக்கின்றதென்றறி!

## சுக்ரீவன் தரு.

### துளியா சாரி என்ற வர்ணமெட்டு.

சுவாமி என்னைப் பாதுகாரும்
சுக்ரீவன்செய்த பிழையைத்தீரும் ஸ

மதுமயக்கத்தினால் வாடினேனானே
அதிபதி என்னை யாதரியும் கோனே
சதிசெய்தேனென்று தள்ளாதீர் தானே
சிதைத்திடும் ஐயனே சிறியவன் நானே
செய்த நன்றியை மறந்திடுவேனோ
சேய னுனும் அவமதிப்பேனோ
ஐயனே உம்மைப் பிரிந்திடுவேனோ
அனுவேவலுமைவிட்டு உயிர்தரிப்பேனோ
அறியாமற்செய்த பெரும்பிழைபல்லாம்
பெரியோர் க்ஷமிப்பீர் பேதையனினிதாம் ஸ

சுவாமி! தாங்கள் அளித்த பாக்கியத்தைப் பெற்ற அடியேன் அறிவின்மையால், தாம் ஆக்ஞாபித்த ஊழியத்தையும் மறந்து, கேவலம் அற்ப ஆசையின் சேஷ்டையைத் தம்மிடம் காட்டிவிட்டேன்! அசட்டையின்றி காத்தருளல் வேண்டும் கருணாநிதி! இனி யாதுபிழையும் செய்யேன்! சத்தியமாய் உமது திருவடியறியச் செய்யமாட்டேன்! ஆதரிக்கவேண்டும் தயாநிதி!

ஸ்ரீராமர்:—கல்யாண்! அப்பா சுக்ரீவா! எழுந்திரு! மன்னித்தேன். சஞ்சலமுறாதே! இனிமேலும் ஜாக்கிரதையாயிரு? நல்லது! உன் சேனைகள்முதலியன யாவும் சுகமா!

சுக்ரீவன்:—தம் கடாக்ஷமுள்ளவர்கட்கு குறையணுகுமோ! யாவரும் சுகமேதான்! மன்னிக்கவேண்டும் சுவாமி வந்தனம்.

ஸ்ரீராமர்:—கல்யாண்! சுக்ரீவா! மன்னித்தேன்? அப்பா இப்படிவா ஜானகியைத் தேடும்பொருட்டாக என்ன யோசனை செய்திருக்கின்றனை?

சுக்ரீவன்:—சுவாமி! அதற்குத் தகுந்தயோஜனை செய்திருக்கிறேன் தென்திசைக்கு செல்லும்பொருட்டாக ஆஞ்சநேயரையும் இந்த சேனைகளையும் அனுப்பப்போகிறேன்.

ஸ்ரீராமர்:—சந்தோஷம்! எங்கே! ஆஞ்சநேயர்.

[ஆஞ்சனேயர், கைகட்டியவண்ணமாய் வருகிறார்.]

## ஆஞ்சநேயர் தரு.

### ஸ்ரீரகுகுல முந்து என்ற வர்ணமெட்டு.

ஸ்ரீராமச்சந்த்ரா சிறியேனைக் காரும்
ஸ்ரீகாருண்யா திருவடியைத் தாரும் ஸ்ரீ

ஆருயிரமுதே அன்பனிடர் தீரும்
அடிபணிந்தேன் ஆதரிக்கப் பாரும் ஸ்ரீ

ஸ்வாமி! அடியேன் வந்தித்தேன்! என்னை ஆதரிக்கவேண்டும் ராம்! ராம்! ராம்!

ஸ்ரீராமர்:—மங்களமுண்டாகுக அப்பா ஆஞ்சனேயா, தென் திசைக்கு நீதானா போகப்போகின்றனை! என்ன!

ஆஞ்சநேயர்:—தங்கள் சித்தப்படியே!

## தரு.

### சம்போ சைதன்ய என்ற வர்ணமெட்டு.

நான்சென்றுவாரேன் ஸ்வாமி செக்
தென் புகழ்ந்திடும் பூமி
வான்புவி எங்கினும் வாய்வு புகாவிடம்
ஜானகி தனியாய் தேடியே
கோணேவாரே ஜோடியே நா

என் அன்னையு மெலிந்திருந்தாலும் காண்
கண்டுமேவாரேன் மென்மேலும்
உன்னை தவணைப்பை உரைத்திடில் யான்
ஊக்கமாகவே பார்த்து
அக்கரன்னை [illegible] நா

ஸ்வாமி! அடியேன்சென்று, கண்டுவருகின்றேன், இதைப்பற்றி தாங்கள் மனமேங்கவேண்டாம். ஆனால், ஸ்வாமி! என்தாயின்

அடையாளங்களைத் தெரிவித்தால், அடியேன்சென்று கண்டு,
ஜெயமுடன் வருகிறேன் ஸ்வாமி!

தரு.

தம்பினமோரி என்ற வர்ணமெட்டு.

விடைதருவீரே விஜயகோதண்டராம
தடையின்றி சீக்ரமாய்ப் போவாரோம் வி
மடக்கதை எங்கிருந்தாலும்
மைந்தனன் தேடி.
வருவேன் க்ஷணத்தில்
வாயுவேகமா யோடி. வி

ஸ்ரீராமர்:—சந்தோஷம்! அப்பா மாருதி! ஜானகியின் அடையாள
ங்களைத் தெரிவிக்கிறேன் கவனமாய்க் கேள்!

தரு:

கைலிஜவாரு என்ற வர்ணமெட்டு

பாவையெனக்கேற்ற இல்லாள் நற்
பாகுகற்கண்டு சொல்லாள்
பூவையும் புருவ வில்லாள் அந்த
பொற்கொடியாளற்கும் நல்லாள்

காரிகைமயவள்குழல் மேகம் அவள்
கழுத்தழகேசக்ர வாசம்
நேரிழைமயகம்பொற் றேகம் அவள்
நெடியழகுடையது நாகம்

இருவிழியிணைநேம் சேர் கொண்டை அந்த
இருகளிலொலிக்கும் தண்டை
அரிவையவளிடை கொண்டை
அழுகைக்கண்டே நொய்யா சண்டை

உடலுமெல்லாமிக வாசம் அந்த
உத்தமிதேகம் ப்ரகாசம்
அடைக்கிடமாட்டார் இவேசம் இந்த
அவனியிலாருவார் நாசம்

அரண்மனையிற் கண்டதைச் சொல் கான்
　　அங்குலிக்கொடுத்ததைச் சொல்
இருவருமாய்வந்ததும் சொல் காடு
　　எங்கென்றுகேட்டாளதைச் சொல்
காட்டிற்குவந்ததுவும் சொல் அங்கு
　　காகாசுரனைக்கொன்றதும் சொல்
வாட்டமுறுவதையும் நீ சொல் அந்த
　　வஞ்சிக்குளன்க்ஷேமத்தைச். சொல்

ஆஞ்சநேயர்:—மகாபாக்கியம் சுவாமி!

ஸ்ரீராமர்:—அப்பா! மாருதி! இவைகள் தவிர, சுமந்திரனோடு தன் தங்கைகளை ஆசிர்வதிக்கும், ககணவாய்ப்புள், கிளிபிள்ளைக் கும் தக்க இரைகொடுத் தாதரிக்கச் சொன்னதையும் தெரிவி இதிலொன்றும் விடாமற் சொல்வாயப்பா மாருதி!

ஆஞ்சநேயர்:—சித்தப்படியே சென்றுவருகிறேன்.

ஸ்ரீராமர்:—கல்யாண்! மங்களமாகுக!

## ஆஞ்சநேயர் தரு.

### சல் பல்க்கீ நாரி என்றவர்ணமெட்டு.

ஸ்ரீராமச்சந்திரனே ஸ்ரீராம சுந்தரனே
ஸ்ரீஜானகி ரமண ராம் ராம் ராம்.
　ஸ்ரீதரா எமை யாதரி
ஜீவரக்ஷகாடதார தீனரக்ஷணசம்மாரா
தேவதேவ தாசரதி ராம் ராம் ராம்
　தேடினேன் புகழ் பாடினேன்
சீதாபதிராமனை சின்மயனேவிபுவே
ஆதரிப்பாயெமை ராம் ராம் ராம்
　அண்டினேன் திருத் தொண்டனென்
நாராயணசாமிநாதி நாயகனேக்ஷீராப்தி
மகாராஜிராமசீதா ராம் ராம் ராம்
　வந்தனம் மிக தந்தனம் ஸ்ரீ
போஷியுங்கள்

———

4-வது சீன் மலைகள்.

ஆஞ்சநேயர் தரு.

வரமுல சகி என்ற வர்ணமெட்டு.

ரகு குல திலகா சுசீலா ராமச்சந்திரா
ஜானகி ராம் ரகு

அகிலலோக ஸம்ரக்ஷண
பகவானேனைக் கருள் தயாபரா ரகு

ராம்! ராம்! ராம்! ஹே! சைதன்யங்களே! நமோ ஸ்ரீரகுபதியின் கட்டளையை சிரமேற் கொண்டுவந்தோம்! நல்லது! இவ்வழியாகச்சென்றால் யாரேனும் மகாத்மாக்களிருப்பார்கள். அவர்களால் தெரிந்துகொள்ளலாம். அதுதான் சரி!

[சம்பாதிக்கு சூரியவெப்பமே விட்டு சிறகுகள் தீய்ந்து தவிக்கிறது.]

ஆஞ்சநேயர்:—ராம்! ராம்! ராம்!

சம்பாதி:—அப்பா! நீங்கள்யார் அதிவேகமாகச் செல்லுகிறீர்களே எங்கு போகிறீர்கள், நில்லுங்கள் அப்பா நில்லுங்கள்.

ஆஞ்சநேயர்:—இந்தசத்தம் எங்கிருந்து வருகிறதோ தெரியவில்லையே! அந்த ஓசைவரும்வழியே செல்வோம் வாருங்கள்.

சம்பாதி:—இப்படி வாருங்கள், நான்தான் வார்த்தை யாடினேன் எங்குபோகிறீர்கள் அப்பா!

ஆஞ்சநேயர்:—என்ன அற்புதம்! இறகில்லாபக்ஷியா யிருக்கின்றதே மானிடர்போலவேபேசுகின்றது, விசாரிப்போம். ஹே! பக்ஷியே! நீயார்! இறகில்லாமல் தத்தளிக்கவேண்டிய காரணம் யாது! ராம்! ராம்! ராம்!

சம்பாதி:—இந்த ராமமந்திரத்தால் நம் சிறகும் வளர்ந்தன! இதற்குக்காரணம் அந்த ராமமந்திரமல்லவா! அப்பா என்னை அப்புறப்படுத்தி விடுங்கள் முன்னதாக! அப்புறப்படுத்த! அப்பா நீங்கள் யார்! எங்கு போகிறீர்களப்பா!

ஆஞ்சநேயர்:—பக்ஷியே! அயோத்தியாபுரியை யாளும், தசரத சக்ரேசரின், திருக்குமாரராகிய ஸ்ரீராமபிரான் தூதனாகும்-

அவருடைய நாயகியை யாரோ ஓரசுரன் கொண்டுபோனான் அந்த அம்மனைத்தேடப் புறப்பட்டோம்.

சம்பாதி:—ஓஹோ! அப்படியா! லங்கையையாளும் ராவணன் இந்த மார்க்கமாகக் கொண்டுபோனானப்பா! அவன் போகும்போது, என் ப்ராதாவாகிய ஜடாயு தடுத்ததால், கொன்றான் சண்டாளன், அந்த லங்காபுரிக்குச் செல்வதுதான் கஷ்டம், சென்று வாருங்கள் ஜாக்கிரதை! ராம்! ராம்! ராம்!

ஆஞ்சநேயர்:—சைன்யங்களே! சகலமும் தெரியவந்தது, இனி தாமதிக்கக்கூடாது. செல்வோம்வாருங்கள் ராம்! ராம்! ராம்

---

## 5-வது சீன் சமுத்திர தீரம்.

### ஆஞ்சநேயர் தரு.

ஜய ஜய கோகுல என்ற வர்ணமெட்டு.

தசரத கோசல பாலா
தவித்தியசம்பூரணா கபிலா
கனக ரூப ராஜ ராஜ
ராம ராம ராம ராம (தச)
ஜானகி ஸ்ரீ தேவி ரமணா
சமயம் காருமுக்க கிருபா
மானிலமே புகழ் கீர்குணா
மதிவதன ஸ்ரீராம ராம (தச)

நீங்கள் யாவரும் ஸ்ரீராமஸ்மரணை செய்யுங்கள் நானிந்த சமுத்திரத்தை ஓரே பாய்ச்சலாகத் தாண்டிச்சென்று, அம்மனைக் கொண்டுவருகின்றேன் நீங்களெல்லோரும் ஸ்ரீ ராமபஜனை செய்யுங்கள் ராம்! ராம் ராம்.

### தரு.

ஆரடா ஆரடா என்ற வர்ணமெட்டு.

தாண்டுவேன் கடலதை காணே இனியே
தாவியே யாவரும் காணா
மேவியே கொடியிற் பூணை

ஆண்டவன்றீ ராமர் சந்த்ரன்
ஆக்ஞையா லங்கையைக் காண
வேண்டி. விஸ்வ ரூபத்துடன்
வேகமதாகவே சாரகந் தன்னையே தா

அண்டாண்டங்கள் கலங்க
விண்டலத்தோர்க ளொடுங்க
கண்டவர்யாரு மடங்க
கதிர் மதியு மிலங்க

கத்தி எதிரில் வந்தால் பற்றி இரண்டாகக் கி
ழித்து விடுவேனென்று குத்திக் குட்டலைதச் ச
ரித்துத் தானவர்களும் எத்தனை பேராகிலும்
மொத்தமாயெதிர்த் திட்டாலும்
சித்தம் கலங்கச் செய்வேன் சீறி
சீறி அன்னவர்களும் மீறி வந்தனராயின்
பாரில் தேய்த்திடுவேன் தீர ராகிலும் சரி
பத்துத்தலை ராவணனை
இத்தினம் கண்டேனானால்
ரத்தம் கக்க குத்திக் குத்தி
சித்ரவதை செய்திடுவேன் மேல் தா

ஜே! சீதாராம்! ஜானகி ராம்! ராம ராம்!

## தரு.

### ஜோகிர் என்ற வர்ணமெட்டு.

ராம ராம ராம ராம ரவிகுல குலோத்தமா ரா
பூமியோர் புகழும் நாதா
புரந்தரா னைக்கருளும் வேதா ரா
தாரக பூஷண உதாரா
தைத்திய சம்ஹார தீரா
கோரினேன் பதமே ஆசா
கோவே என்னைக் காரும் வீரா ரா

ஜே! ராம் ராம்! என்று யாசித்தாரு இடையூறும் சம்பவியாமற் படி
இருகை பணிக்கவேண்டும் ஸ்ரீராம் ராம் ராம்.

[அனைவரும் ஸ்ரீராமகல்மர்ஜனை செய்ய
மாருதி கடல் தாண்டுகிறார்.]

---

6-வது சீன் லங்காபுரி கோட்டை.

ஆஞ்சநேயர்:—சாகரத்தை தாண்டிவிட்டோம்! இதோ ஒரு பெருத்தமலைபோல் ஓர் அரக்கியிருக்கிறாள் கவனிக்கில் கோட்டைவாயற் காவற்காரிபோல்தெரிகிறது அருகிற்சென்றறிவோம்.

லங்கிணி:—ஆ ஹா ஹா! அடே யாரடா நீனெங்காவல்மீறிவந்தவன்! நில் அப்படி?

ஆஞ்சநேயர்:—நாம் உட்செல்வோமென்னின் இவள் வழிவிடமாட்டாள்போலும், நல்லது! ஒருகை பார்ப்போம், முதலாவது இவளைப் பலிகொடுத்து விடுவோம், அடிபெண்ணே! நில் யுத்தத்திற்கு அப்படி இப்படி அசையாதே, நின்ற விடத்திலேயேயிருந்து போர்புரி!

லங்கிணி தரு.

ஸ்ரீஜயதுதேவி என்ற வர்ணமெட்டு.

நீ யஞ்சாமலேவந்த தாசடா
நில்லடா மூடா நில் நில் நில்

ஆஞ்சநேயர் தரு.

காயம்வாடிட அட்டிவதைப்பேன்
கலங்கிட உடைப்பேன் பல் பல் பல்

லங்கிணி தரு.

காணேயிதற்கு காவலாகுமடா
ஞாயம் பேசாதடா ஓ ஓ ஓ

லங்கிணி தரு.

தானவச் சிறுக்கி தட்டி நெறிப்பன்
சுதாமதேவதையே ஆ ஆ ஆ

ஆஞ்சநேயர் தரு.

தசைமேலுன்னை வீழ்த்துவேனடா
சண்டாளா செய்வேன் கர் கர் கர்

## ஆஞ்சநேயர் தரு.

அறைகிறேன் பாரடி. ரத்தம் கக்கிட
அரக்கி இதோ இதோ பார் பார் பார்

ஒழிந்தாயா! சண்டாளி! நாசகாரி! சீ!

லங்கிணி:—ஆ! என்னசெய்வேன்! ஆவிபோகுதே! ஐயனே! ஸ்ரீராமதூதா! உன்னை இன்றென்றறிந்தேன்! நானறியாது செய்த பிழையை மன்னிக்கவேண்டும். ஹே! பரமபக்தா! ஆதியில் பிரம்மதேவன் என்னை சிருஷ்டித்து, இந்த லங்காபுரியைக் காக்கும்படி யாக்யாபித்து, கடைசியாக ஸ்ரீராமதூதனுகிய மாருதியால மடிவாயென்றும், அதன்பிறகு சத்தியலோகம்வந்து சேரென்றும் ஆக்யாபித்தார்! நானிப்போது மடிந்தேனே இந்த லங்கை இனி அழிந்துவிடும்! இங்கிருக்கப்பட்ட அசுர கூட்டங்களெல்லாம் ஒழியும், இனிமேது உன்னை வெல்பவர் யாருமேகிடையாது! உமது காரியத்தைநிறைவேற்றிக்கொள்ளும் வெற்றியடைவீர்! உமக்கினி ஜயம் ஜயம்! ஹா (மடிகிறுள்)

---

## 7-வது சீன் தெருவு.

ஆஞ்சநேயர்:—இனிமேது நாம் உட்சென்று கவனிப்பதே உசிதம். ஆஹாஹா இந்த லங்காபுரியைப் பார்த்தால் எவ்வளவு அழகாகத் தோன்றுகிறது பேஷ்!

### தரு.

இந்த சுக ரஞ்சித என்ற வர்ணமெட்டு.

ஆஹா இந்த லங்கா புரி
அழகை வர்ணித்துச் சொல்ல
ஆகா தாகா தென்றலே
அகங்குளிர்ந்தேன் மென்மேலே ஆ

ஓஹோ இதன் பெருமை தன்னை
ஓதியுந் தாமரை அந்த
ஓரா யிரம் பணுமுடி
போனுலும் ஆகாதிக்கோடி ஆ

எந்தவுலகுமிதற் — இணையில்லை இணையில்லை
சிந்தாகுலமின்றியே — திருமே எவர்கள் தொல்லை
பந்தபாசமுமிருக்கும் — பதிதனுக்கினுவே எல்லை
மந்தஹாசந்தோனுது — மனநிற்சஞ்சலமில்லை ஆ

மாடமாளிகை — கூடகோபுரங்கள்
ஓடையாறுகள் — மேடைசாளரங்கள்
சோலைசந்துகள் — வீடுஜனபுரங்கள்
வாடைவாடையாய் — கோடானுகோடிகள்
வரிசையாகத் — தெருவும் விதம்வித
மரங்கள்தேவ — தருவும் சந்திரனும்
அழகுசெய்யுதே — திருவும் அதற்கேற்ற
சரியாயமைந்த — உருவும்
சாலையும் — குளிர்ந்த பூந்
சோலையும் — தளிர்ந்த பல
வேலையும் — புரிந்த சுக
ஜலமும் — ஆஹா
ஜில்லென்றுவீசுதே — சிரங்களுமசைய
சல்லாபமாகுதே — சாங்களும் இசைய ஆ

அப்பா ! இதைவர்ணிக்க நம்மாலேலாது ! இருக்கட்டும் ! இதைப் பற்றி கவனித்திருந்தால் நாம் நாடிவந்த விஷயம் முடியாது! இன்னும் முன்னுக்குச் செல்வோம். ஆஹா பலேபேஷ் பார்க்கப்பார்க்கப் பரவசமேயாகின்றது ! கண்களுக்கூசுகின்றது.

தரு.

மெத்தநரைத்த கிழவனை என்ற வர்ணமெட்டு.

இந்த லங்காபுரி — ராஜ்யமதிக்கிட்டேன்
எழுநூறுகாத — யோசனைதூரந்தான்
அந்த அரக்கனு — மதிக — சூர — னென்று
அசமதிற்தெரியுது — ஆனந்தமா — யின்று இ

து எழுநூறுகாத யோசனை விஸ்தீரணமென்று கேள்விப்பட்டிருக்கேன் அது இன்று எனக்குஉள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கியது! நேரில்பார்த்ததால் சந்தேகமும் தீர்ந்தது. நல்லது ! நாம் வந்தகாரியமுடிந்தது, இனி மீது சொந்த காரியத்தை கவனிக்கவேண்டும் நமது தாயார் எங்கிருக்கின்றார்க

ளோ! குறிப்புத்தெரியாதே! ஜாடையு மறிந்திலேனே! என்ன செய்வேன்! மைந்துகால்களும் அயர்ந்தன! உடலும்வேர்த்தன! களைப்பும் மேலிட்டன! இனி யோஜிப்பதிற்பயனேயில்லை, ஆக வேண்டிய விஷயங்களை கவனிப்பதே உசிதம்? ஆஹா இப்பேர்ப்பட்ட பெரிய நகரில் என்தாயாரை.

ராரா பூந்திரா என்ற வர்ணமெட்டு.

தரு.

எங்கு கண்டு தேடுவேன்
எவ்வழியை நாடுவேன்
அங்கு மிங்கு மோடியே
அலைகிறேனே வாடியே — எ

லங்கா நகர் முற்றிலும்
லளிதமுடன் பார்த்தேனே
செங்கமலவல்லி தாயை
தேடித்தேடிக் காணேனே — எ

என்தாயை அரக்கனும்
எங்கொளித்து வைத்தானோ
தென்னிலங்கை நகரமெலாம்
தேடிக்காணு தென்விதிதானோ — எ

என்ன செய்வதிதற்கு? இதோர் மாளிகை யிருக்கின்றது, நாமதனுட் சென்று கவனிப்போம். சகலரும் உறங்கிக்கொண்டிருக்கிறார்கள், நாம் சந்தடிசெய்யாமற் செல்வோம்.

---

8-வது சின் சயனாக்ரஹம்.

[ராவணன் உறங்குகிறான், அவன் பக்கலில் உறங்கும் மண்டோதரியை மாருதிகண்டு, பிராட்டி தானோவென சந்தேகிக்கிறார்]

ஆஞ்சநேயர்:—ஆ! ஹா! இதோ அந்த பத்துதலை ராவணன் நித்திரைசெய்கிறான். பக்கத்தில் நித்திரை செய்பவர்தானோ நம் தாயார்! சே! சே! அல்ல! மேலும் இவள்கொரட்டைவிடுவதா

னும், கோட்டுவாயா யிருப்பதானும், இவள் ராக்ஷதஸ்திரியே யாகும். வேறு இடம் சென்று பார்ப்போம்! சே! நாமிங்குவந்தும், தேரில் அந்த அசுரப்பயலாகிய,

### தரு.

எப்படிதான் தாய்வயிற்றில் என்ற வர்ணமெட்டு.

இந்தராவணனைக் கண்டுஞ்சும்மாபோனால்
என்ன அநுமான் நானே. இ
அந்தராமத்ரோகி அவன்பலமறியேனோ
ஆத்திநார் கிழித்தாற்போல்
அப்படியே கிழிப்பேனே இ
புவியுமொன்றாய்க் கிட்டவே மண்டோதரி
புலம்பும்படி முட்டவே கண்டவர்கள்
எவருங்கெக்கலி கொட்டவே என்வாலினால்
இழுத்துப்பொடித்து கட்டவே பிடித்துநா
னிறுக்கிறேன் தோளுடைய
முறிக்கிறேன் தலைபத்தும்
அறுக்கிறேன் தேங்காய்போல
நறுக்கிறே னல்லாமல். இ

சே! நாம்செய்த யோஜனை வீணேதான்! நாம் கொல்லப்படாது. இவனைக்கொல்ல அந்த ஸ்ரீராமபாண மிருக்கிறது, நாம் இதற்குள் அவசரப் படக்கூடாது, முன்னதாக நம் தாயிருக்குமிடந் தேடிச்செல்வோம்.

மாருதிபோதல்.

---

## 9-வது சீன் அசோகவனம்.

[பிராட்டியார், இரிச்சடை,
அரக்கியர் சூழவிருத்தல்]

### சீதாபிராட்டி தரு.

ஆற்றுவாரில்லை தேற்றுவாரில்லை
ஐயோ தெய்வப் பலனில்லையே
கூற்றுவர்போலே அரக்கியர்கள்
கூட்டத்திலானேன் தொல்லையே

தாழ்வுசெய்தேனோ தெய்வமேயெந்தன்
சாமியே நெஞ்ச முருக்காயோ
பாழ் உயிரே என் சாமிதிருமுகம்
பார்க்குமட்டு மிருக்காயோ தா.

முன் ஜென்மத்தினில் யாரைக்கெடுத்தேனோ
மூர்த்தியே தவிக்கிறேனனே
என்னைக் காத்தருள் ஏதும் நேராமல்
இணையடி பணிந்திட்டேனே மு

தெய்வமே! என் கற்புக்கு யாதொரு பங்கமும் நேரிடாமற் பாது காப்பது நின்கடன்! அந்தோ! இப்படி தனியாய் வருந்தி மெலிகிறேனே! என்னை இந்தசமயம் என்மனதைத் தேற்றுவோரும், துயரை யாற்றுவோரும், என்னைக்காப்பாற்றுவோருமில்லையே? என்னசெய்வேன் எப்போது என் நாயகர் திருமுகத்தைக் காண்பேனோ ஆ! தெய்வமே!

தரு:

பிந்தோ ஆவோஹு என்ற வர்ணமெட்டு.

எனக் காதமேரி நான் கொண்ட துயரமது
இருமோ என்
இருங் குலைந்தே நாள்
தோறு மலைந்தேன் யாது
நேருமோ இனி ஆ

எந்தன் ஆமியே என்னைக் காத்திடும் ஸ்ரீராம
சாமியே சுக
பூமனே ஸ்ரீரகு
ராமச் சந்த்ரரே சுக
நேமியே இனி ஆ

சேவை தருவீரோ எனக்குன் அருள்தனையின்று
புரிவீரோ இனி
தெரிவீரோ அறிவீரோ
குறிவீரோ எந்தன் முன்
வருவீரோ இனி

65680

சதுர் வேதனே எந்தனுடைய பிராண
நாதனே எனை
அதரி யீதறி
நீதெரி வீர்ஜெய
போதனே இனி ஆ

திரிச்சடை:—அம்மா நாயிப்படி தயங்குவதிற் பயனென்ன! வருந்தவேண்டாம் தேவி!

சீதாபிராட்டி:—லோகத்தில் பெண் ஜென்மம் கெடுப்பது கேவலம்! அதனிலும், ஆளைவிடுத்து அயல்கனையிருப்பது மிக்க கேவலம்! மேலும் சிறையாயிருப்பது கேவலத்திலுங் கேவலம்! இந்தப்பாதகியைமணர்ந்ததாலன்றோ! ராஜ்யத்தைவிடுத்து, சடைமுடி புனைந்து, கானகத்திலிருக்கும்படி நேர்ந்தது ஆஹா என்ன செய்வேன்! நான் காட்டிலிருக்கும்போது மான் வரவும், அதைப் பிடித்துதாருமென்ன, என் நாயகர் சென்றதும் திடீரென்று துர்சப்தமொலித்ததால், எனக்குக் காவலாகயிருந்த இளையவரை, சென்று பார்க்க தெரிவித்ததின்பேரில் அவர் பன்முறை தைரியமொழிந்ததும் கேட்டேனா? பாவி சண்டாளி அந்தோ! எனக்குத் தீங்குவருமென்றறிந்த அன்னவர் என் காலில் விழுந்ததையும் கவனித்தேனா? இல்லை! பாதகி! பாதகி! அவர் செவியில் நாராசம் விழுவதுபோல் தீயச்சொல் புகன்றேனே! அந்தோ அதை நினைக்க நினைக்க மனம் பதறுகிறதே.

தரு.

பஹுதோரேஸமை என்ற வர்ணமெட்டு.

நினைத்திடமனம் பதறுதே நிலைமாறுதே நி

தனியாய்வருந்தியே தவிக்கிறேனுனே
கனமதுகுறையுதே என்னசெய்வேன் கலங்கிறதே நி

என்குணமறியியே ஏக்கமுமாகுதே
இன்பம்மீதுசேருமோ அறிகிலேன் அயர்வாகுதே நி

எத்தனை நாளைக்கு இப்படியிருப்பேனோ
[illegible]த்தயங்குதே அடித்துமே இதறுதே நி

நெஞ்சந்துடிக்குதே! என்மைத்துனர் கலக்கமுற்றதாலன்றோ நாமித்தகைய கதியடைந்தோம். அந்த பாவத்திற்கும் ஆளாகினேம். என்னசெய்வேன்! இனிவருந்தியாவதென்ன! யாதொரு பயனேயில்லை! விதியே! விதியே!

திரிச்சடை:—அம்மா வருந்த வருந்த விசனமேதான். அதைவிட்டொழியும், தங்கட்கெவ்வித இடையூறும் நேராவண்ணம், யான் காக்கிறேன்.

சீதாபிராட்டி:—ஏட்டில் சீனி என்றாலினிக்குமா! அந்தோ! நெஞ்சங் கலங்குகின்றதே. ஆ! இதென்ன இடதுபுஜம் துடிக்கிறதே! யாதுகாரணமோ.

திரிச்சடை:—இனி கலங்காதீர். இனி நல்லகாலந்தான்! அம்மா சொர்ப்பனங்கண்டேன் அதைத் தெரிவிக்கிறேன் கவனியும்.

பாளைவாய்க் கமுகில் என்ற வர்ணமெட்டு.

கண்டகினை வகைதன் கேட்பாயே
அன்னையே ஜானகி நீயே
மண்டோதரி வெறுந்தலையை சீவினள் உன் பு
ரண்டழுதாள் வீழ்ந்துமே மூதேவியாள் ஓர்
பெண்டுமவன் வீட்டைவிட்டுமே
என்பிதாமனைக் குட்பட்டுமே
ஏங்கிடாமல்நின்றுவிட்டாளதி வாயே
போங்காலந்தானவனுக்கே வரும் தாயே அ
பூமலருங் கருகிடவும்
சேமியாலய மிடியவும்
நேரில்பேய்பிசாசுக்குடி கொண்டதே அங்கு
சிரசுக்குலைந்துஅயர் விண்டதே அந்த
ஸ்ரீராவணன் சிரசிலெண்ணெயை
வாரியிட்டுமே தட்டினன்கையை
வாழ்நாள்முடிவு காலமினிதா னம்மா உமக்கு
தாழ்விலையினி சஞ்சலம் விடுவீர்சும்மா

சீதாபிராட்டி:—அம்மா! இப்படியினில் தைரிய வார்த்தையாடினால், என் மனமிளகுமோ

திரிச்சடை:—அம்மா வருந்தவேண்டாம் இதோ பார்க்கிரா ஓர் வண்டு உமது செவியிடமாகவந்து ரீங்காரித்ததால், சற்றுநே

ரத்திற்குள் ஓர் தூதன் சுபச்சேதி சொல்லப்போகிறான் ஆக வேகலக்கத்தைவிட்டு, சந்தோஷமாகவே யிரும்.

சீதாபிராட்டி:—என்னமோ எவ்வாறுமுடியுமோ. ஆ! பிராண நாதரையே நான் அறியாமற்செய்த பிழையை மன்னித்துக் காக்கவேண்டும் தயாநிதி! அம்மா திரிசடை உட்காரு வோம் வா.

[இருவரும் உட்கார, மாருதி அங்கு திகைத்து கவனித்தல்]

ஆஞ்சநேயர்:—ஆஹா இவர் யாரோ தெரியவில்லை மறைவாக யிருந்து கவனிப்போம் (ராக்ஷதர் கூச்சலிட) ஆஹா அதென்னமோபேரிரைச்சல் கேட்கிறது மறைவாகயிருப்போம்.

[மாருதி ஓர் மாமீது மறைவாக யிருத்தல்]

சீதாபிராட்டி:—ஐயோ! அந்தப்பாவி வருகின்றானே. என்னசெய்வேன் ஆ பிராணபதி! என் கற்புக்கு யாதொரு பங்கம் நேரா மற் காக்கவேண்டும் அரையே.

[ராவணன் வருகிறான்]

ராவணன்:—அடாமல்லர்காள்! ஜாக்கிரதையாக யிருக்கிறீர்களா (ஆம்) சந்தோஷம்! ஆஹா இதென்ன இவள் இப்படி சோகமாகயிருக்கிறாளே! இனைத்துமிருக்கிறாள். நல்லது! அம்மா அம்மா திரிசடை (வந்திக்க) மங்களமுண்டாகுக க்ஷேமந்தானா? சீதாங்கனி எவ்வாறிருக்கிறாள். ஏன் இன்னும் இணங்கவில்லையா? என்ன!

திரிசடை:—இல்லைபிதா! இதற்குள்ளாய்விட்டதா? இப்படிதாம் அவசரபட்டாலெப்படி? நாளாக ஆகதான் மனமிறங்கும்.

ராவணன்:—அப்படியா? நீ அப்பாற் சென்றிரு.

[திரிசடை, அரக்கியர்கள் புறம்பே செல்கிறார்கள்]

ஹே! சீதாங்கினி:—க்ஷேமந்தானா! என் பேசாமலிருக்கிறாய்

தரு.

பருலனுமாட என்றவர்ணமெட்டு.

இனியாகிலும்நீ என்னைச் சேர

இசையாயோ சீதா

தனியாகவே யிங்கிருக்க
 தக்கதல்லவே சீதா
இனிவுடனே என்னோடாடி
 இன்பக்தா சீதா இ

அடி என் மரகதமே! மாணிக்கமே? நவரத்தினமே! நான் இவ்வள வாக்க் கெஞ்சியும் உன்மனமிளகவில்லையே? ஹெ! சீதாங்கனி? ஏதோ வாயைத்திறந்து கொஞ்சம் வார்த்தை யாடேன்! கண் மணி! ஹெ! காதலி?

[பிராட்டியார் ஓர் துரும்பை எதிரில் போடுதல்]

சீதாபிராட்டி தரு.

நீயண மோரலி என்ற வர்ணமெட்டு.

கேளடா ராவணப் பதரே இந்த
 கெடுமதி உனக்கேன்டா சீ சீ சீ கே

ஏளடா பொல்லாதடா
 நாயே நீ யறிவாயடா கே

அன்னிய மாதர் தம்மை
 அன்னையென் றெண்ணுவாய்
கண்ணமா யெண்ணி னல்
 கவலையாற் குன்னுவாய் கே

அரக்கப் பயலே சீசீ
 அகம் பாவம் கொள்ளாதே
நாகில் புழுவாய்த் துடித்து
 நாசமே யாவாய் பேதே கே

அடா பாவி! அகம்பாவம் கொள்ளாதே? கேவலமாக வார்த்தை யாடாதே! சென்றுவிடு? என்னை காடாதே! பழிதேடாதே! வீணில் வாடாதே? போ போ நில்லாதே. இக்தப் பேதையின் வயறெரி யச்செய்யாதே. மரியாதையுடன் செல்! தூரமாகவே நில்.

ராவணன்.—ஹெ! சீதாங்கனி! நீ என்னை எவ்விதமாக வைதபோதி லும் சரி! எனக்குச்சம்மதந்தான் ஏதோ தயவுசெய்?

சீதாபிராட்டி:—அடே பாதகா! உன்செருக்கை யடக்கு! நீ சீக்கிரமாகவே நமனுலக மடைவாய், என்னை பலவந்தம் செய்யாதே! வீண்மொழி பகராதே! அடாபாவி! துரோகி! நீபிழைக்க வேண்டியிடில் என்னை என்நாயகர் முன் விடுத்து அலக்கேடிக்கொள்! இன்றேல் நீ பிழைப்பதருமை மிகவும் அருமை! ஆயுள் முடிவுக்குதா னிப்படி அலைகின்றனை? வீணில் மெலியாதே! கெடுமதி கண்ணனிற்குப் புலப்படாது. எனைத்தொடாது நீசெல்! சொன்னேன்! சொன்னேன். ஜாக்கிரதை.

இராவணன்:—ஹே! பெண்பாவாய்! நீசொல்வதிற் பயனில்லை! அச்சொல் என்செவிக் கேற்காது! ஹே! பிரியா?

த.ரு.

உந்தனைப் பார்க்க என்ற வர்ணமெட்டு.

தையலே உன்னை மருவ
தயவு செய்து
தைரியக் கருவாய் சருவ தை
சையோகம் செய்திடவே
தடைசெய்ய லாமோ சீதா
மையல் தணிக்க வாடி.
மரகத விகசித விரஹ சரஸாதி
மதன சரஸ ஒய்யாரி எனக்
கதிசுகந் தரும் கெம்பீரி இந்த
பதியிலுனைப்போ லில்லை பாரி நான்
துதித்தேன் பதமே உன்னைக்கோரி என்
துயரைத் தீரடி.
அயர்ந்தேன் பாரடி
நயந்து காரடி
ஜெயமாய் சேரடி.
சேயிழையே நாமிருவர்
செல்குவோம் சுகுணவதி
நாயகியே ரஞ்சிதமே
நாடினேன் மதனாதி
நாராயணை சாமி பதமே பாடியே
பேரானந்த மாக நிதமே யாடியே

சோலையிரு சம் மதமே காடியே
பாராயடி காணும் சதமே என்
பத்தினியே மாதே லேடி
இத்தினமே காமுங் கூடி
சித்தஜனின் லீலை யாடி
மெத்தையிலிருப்போம் வாடி ஊத

ஹே! மாதுமணி? இப்படி என்னை தாக்ஷியாதே! உன் மனப்படியே யிருப்பேன். இந்த லங்காபுரியை உனக்கு பட்டமுங் கட்டி வைக்கிறேன். ஹே! வனஜாக்ஷி! தயைசெய்து என்மனதிற் இசங்கு, பார்! காதலி? என்னை வெல்ல ஒருவராலும் முடியாது. இவ்வரசை உனக்கே தத்தம் புரிவிக்கிறேன் எப்படியாகிலும் மனது வை மாதுமணி!

சீதாபிராட்டி:—சீ! சீ! ராசகாலா!

## தரு.

### மஞ்சரிகர் குந்தள என்ற வர்ணமெட்டு.

அடா பாவி கடா பாதகா
அடா காதகா
அடா நீதகா
மடமையாய்ப் பேசாதே தோதகா மன
மாறாதே எனைக் கோறாதேயடா
மீறாதே கண்ணாற் பாராதேயடா அ

## ராவணன் தரு.

இனிய சீதாய கனியே வந்திடு
மனமு வந்திடு
தினமே தந்திடு
வனஜாக்ஷி ரதி மணியே குந்திடு இதோ
வாடுறேனடி. தேடுறேனடி.
காடுதேகனை ஜாடுதேயடி இ

## சீதாபிராட்டி தரு.

சண்டாளா தூரநில் மீர்மூடா
சீ குடிகேடா
காதர்க்கு யீடா

கண்ட படி பேசாமற் போடா எனைக்
கருதினலடா வருத்தமாவாயே
விருதாவிலேன் உருகிறாய் நீயே
வினைக் காவாய் தகாதில்லடா பாவி
எனைக் கருதாமல் நீயுஞ்செல்லடா அ

ராவணன் தரு.

விட்டிடாதே வீணே யென் கண்ணே
நாணமேன் பெண்ணே
காணடி பொன்னே
அரிவை யென்னை அணியவா மின்னே சுக
அஞ்சுகமே ரஞ்சிதமே
சஞ்சலந்தீர் கிஞ்சுகமே
சந்தோஷமாயிருக்கலாம் கோதே இனி
எந்தனைசோகவே செய்யா த இ

சீதாங்கனி! இச்சமயம் என்னை ஆதரிக்கா விட்டால் என் ஆவி நிலையாதே! காதற்காரி?

சீதாபிராட்டி:—அந்தோ! என்னசெய்வேன்? இந்தப்பாவி இப்படி வம்பாடுகின்றானே! ஐயோ மிக்க பயமாயிருக்கின்றதே?

ராவணன்:—பிரியா! என்ன எண்ணமிடுகின்றனை! திடப்படுத்திக் கொள் பெண்பாவாய்.

தரு.

அச்சாமேரி லாகீச என்ற வர்ணமெட்டு.

ஏனோ என்னை வாட்டுவாய்
எனக்கு சுகந்தருவாய்
என்குறேன் எனைத் தாங்குவாய்

அல்லும் பகலுமேலே
அலைகிறேன் ஆன்றலே
அன்னமே அன்னமே சொர்ணமேவா

உன்றன் மடிந்தே  னென்று
  உலகப்பழி  நேருமின்று
உருகிறேன்  உருகிறேன்  கரைகிறேனென்  எ

பெண்பாவாய்! நீ பலபல யோஜனை செய்வதிற் பயனேயில்லை அன்னவர்களிங்குவரவே முடியாது! என்னையும் வெல்ல ஏலாது! இந்த ராஜ்யத்தை உனக்கு முடிசூட்டுகிறேன்... நான் உனக்கு ஏவல்புரிகிறேன்! தயைசெய்யேன்.

சீதாபிராட்டி:—சீ! சீ! ஈசகாலா? இப்பேர்ப்பட்ட மொழியால் நீ மீளாநரகமே யடைகுவாய்! இது உண்மை.

தரு.

ஸாவேரியா என்ற வர்ணமெட்டு.

ராவணாத் துரும்பே  ஸ்ரீ
  ராமர்பொருளை நீ  சிந்திக்கலா குமோ  ரா

பாவபுண்யங்களை  பாராமல் நீயே
  பதறியழைக்கிறாய்  பாரிலறி வாயே
தேவியென்றழைத்தால்  நாவறுந்திடும் பேயே
  தேடியேயுன்னை  சென்றிடு வாயே  ரா

அடே துரோகி! அன்னியமாதரை ஆச்சியென்றழைப்பனோ? போய்விடு.

ராவணன் தரு

தர்க்கம்.

மலடி வயிற்று என்ற வர்ணமெட்டு.

இப்படிநீதடை  செய்யாதே  மாதே
  இனிமீது நீஎன்னை  வையாதே
சொற்படி கேளடி  நோயாதே  பூங்கோதே

சீதை தரு.

ஏதடா யிப்படி  பேசுறாய்  மூடா
பாதக மல்லவோ  குடி கேடா
நீதா வார்த்தைக  ளாடா தேடா நீசிபோடா

### ராவணன் தரு.

என்ன சொன்னாலும் சரி தேவி
இனிமேல் நில்லாது என் ஆவி
அன்னமேவந்தணிகுவாய் தாவி என்சஞ்சீவி

### சீதை தரு.

ஆவிநில்லயா விட்டால் எனக்கென்ன சீசி
ராவணாத் துரும்பே வீணாய்ப் பேசி
பாவியே வருத்தாதே படு தோஷி நீயாலோசி

### ராவணன் தரு.

எனைக்கருதாவிட்டால் என் சுகு மாரி
இன்றேனுன் மடிவேன் செம்பிரி
உனையே நம்பிவிட்டேன் நான் ஜோரி என்னுப்யாரி

### சீதை தரு.

வளர்த்தியே வார்த்தைகளைப் படியாதே நீ
ஒளிக்குமுந்தானையால் மூடியாதே
இளக்காரமாகவே அடியாதே வீணாய்ப்படியாதே

ராவணன்:—ஹே! பெண்பாவாய்! இந்தசமயம் என்னைக்கார்! உனை எப்போதும் கைவிடமாட்டேன். ஏதோ இப்படி என் சமீபமாக வா?

### சீதை தரு.

அன்னி தயைபன்னி என்ற வர்னமெட்டு.

அடே பாவி இது தருமா மூ
தேவி தூர நில்லடா
சீசீ கேவல மாகப் பேசினால்
காவற்று விழும் அடடா பா

இந்த தரணி யில் மாதர் தம்மை
மோசம் செய்யும் பேயே
நீசுக்கு முதவா நாயே
ஆசைவைத்தால் நாசமாவாய் பா

சீசீ எட்டாக்கனி கிட்டாதடா
கொட்டாவி விடாதே
மட்டிமூடா எட்டிப்போடா
மூட்டாளே வீணாய்க்கொஞ்சாதே பா

ராவணன்.—நீ என்னை வீணில் தூஷியாதே! நீ என் பராக்ரமம் அறியாய் அந்த நரப்பயல்கள் இங்கு வரவேமுடியாது வீண் எண்ணங்கொள்ளாதே ?

சீதாபிராட்டி:—அடே சண்டாளா! விட்டிற்பூச்சி விளக்கில் வந்து மடிவதுபோல் பதிவிரதைகளை நீயென்றும் பாராது கருதுகிறாயே! இதுதகுமா உனக்கு? பத்துதலை பூச்சியாகிய நீ ஈயைப்போல் இத்தீயில் மொய்க்க எண்ணுகிறாயே? போ! மரியாதையாய்ப்போ?

ராவணன்:—சீதாங்கனி நீ என் மேலிப்படி வீணாக

தரு.

ஆதரி மாமயிலே என்ற வர்ணமெட்டு.

கோபங் கொள்ளலாகுமா எந்தன்
கோகிலமே கோமளமே
போக வசீகர மோகன வஞ்சியே கோ

ஆபத்தைத் தீர்த்திடு
அஞ்சுகமே தேனே
ஆதரித்தா யானால்
ஆவிநிலைக்கும் மானே
தாபமிகுதே யின்று
தணிப்பாயதைத் தானே

சல்லாபியே சரஸவதனி
உல்லாசியே உலகமதனி
உத்தமசித்தஜ நித்யக்கல்யாணி
பத்தரைமாற்று பசும்பொன் னுன்மேனி
சுத்திநேனுதரி நாயகிகீர்வாணி
நாயேனை யாண்டருள்வாய்
நாயகியே பூண்டருள்வாய்

நலமுடனிணைந்திட நாடிடு வாயென்னை
பலவித விரஸமே புரிபவனீ நீலை

பாவிப்பாய் ஓவியே
சீலா விநோதியே
மாலது தீர்த்திடு
வாம் ஜெகஜோதியே கோ

பெண்பாவாய்! வருத்தப்படாதே. உனக்கு இனி குறைவே யில்லை, சஞ்சலப்படாதே. வீணில் என்மேல் சினமுறாதே! என்னை இதுசமயம் ஆதரி. என்ன தெரிவிக்கிறாய். வார்த்தையாடேன்! மௌனமேன்! நல்லது அம்மா திரிசடை! எப்படியாவது இவள்மனதைஇளகும்படிசெய்! யான்சென்றுவருகின்றேன்

[ராவணன் போகின்றான்]

திரிசடை:—நல்லது பிதா

சீதாபிராட்டி:—ஒழிந்தது சனி! சீ இந்த ஜென்ம மெதற்காயது! பயனற்றதே யாகும்.

## தரு.

சல்பல்கி நாரிதோரி என்ற வர்ணமெட்டு.

கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்
கண்டுகொண்டேன் என் அன்னையை
கண்ணுறாமனமாற நான் நான் நான்

காதலுடனே
மாதாவை நானே
கஷ்டப் படாமலே
இஷ்டமாய்த் தானே

கண்ணிமை கொட்டுமுன்
முன்தோளில் தாங்கியே
என்னையன் தென்புறமே

முன் விடுவேன்
முன் விடுவேன்
முன் விடுவேன்

## சீதாபிராட்டி தரு.

அபனெழுதின என்றமெட்டு.

தலைதனிலெழுதிய விதியோ காலகெதியோ இங்கு
தனியாய்த் தயங்கிவிட்டது மதியோ
அலைகடல் துரும்புபோல
அலைகிறேனுன் துரோகி
நிலையில்லா பக்ஷிபோல
நின்றேனே தனியாகி — தலை

இந்தப்பாதகன் மறுபடியும் வருவானாயின் கெதி சம்பவிக்குமே? என்னசெய்வது! ஆ பிராணபதி! இதோ என் பிராணனை விடப்போகின்றேன்

## தரு.

ஸ்ரீரகு குலத்துத்ம பதியே
தயா நிதியே
வீரரே என் ஆவி
விடுக்கின்றேன் கெதியே
விமலமேகாருயித் துதியே — ஸ்ரீர

(மரத்தடியிற்சென்று தன் ஆவியை மாய்த்துக்கொள்ளும்சமயம் மாருதி முன்வருதல்,)

(தலைகுனிந்து) ஆஞ்சனேயர்:—ராம்! ராம்! ராம்! வந்தனம் புரிகின்றேன்தாயே.

சீதை.—இதுயார்? அரக்கரின் மாய்கையோ யாதோ! நம் நாயகர் பெயரைத் தெரிவிக்கின்றதே! அப்பா நீ யார்? இந்த சமயத்தில் இங்கென்று வரவேண்டிய காரணமென்ன?

ஆஞ்சநேயர்:—அம்மணி என் பெயர் ஆஞ்சநேயன். ஸ்ரீராமபிரானின் தூதுவனும்பரன் அந்தபகவான் அனுப்பவந்தவனாகும்.

சீதை:—சரி! நீ எப்படி அவருக்கு தோழனானாய்? நல்லது அவருடைய அடையாளங்களை தெரிவி!

ஆஞ்சநேயர்:—மகாபாக்கியம் தாயே.

தரு.

மலடிவயற்று மகன்போல என்றமெட்டு.

நீலமேகஸ்யாமள நுபன்
நித்யகல்யாண வரஜு தோபன்
நிர்மல விற்பனசுகுண ப்ரதாபன் ரவிபூபன்
காம்பீர புருடன் கருணு உதாரன்
காண்போர் மயக்கிடும்விற் வீரன்
கண்ணிற்கினியராக்ஷத சம்ஹாரன் ஸ்ருங்காரன்

புஜப்லதீர குரங்கின்படையான்
புகழுடையான் அதிபலமுடையான்
பூராண்ரவிகுல நர் கொடையான் சுகமுடையான்

ஆஞ்சநேயர்:—தங்களைமிதிலபுரி கன்னிகாமாடத்திற் கண்டாராம் கானகம் வர அரண்மனைக்கு வெளியில் வந்ததும் காடெங்கே யென்றுகேட்டீராம், சுமங்கிரரோடுநாகணவாய்ப்புள்கிளிகளை வளர்க்க தங்கைகளிடம் கூரச்சொன்னீராம்? இதோ இந்த கணையாழியும் தந்தார் பாரும்!

சீதை:—இவையாவும் சரியே! சிறியஉருவத்தோடிருக்கும் நீ எப்படி கடலைத்தாண்டினை போ! அதுதான் சந்தேகம்.

ஆஞ்சநேயர்.—இதோபாரும் (விஸ்வரூபம்)

சீதை:—அப்பா போதும் போதும்.

கவி.

கண்டேனுன்சேவையை காம்பீரஜகத் ஓங்கார
குண்டல ஞானவாரி குணபதிமுன்போல

மங்களமூண்டாகுக. சிரஞ்சீவியாகுக. அப்பா அவர் ஏதேனும் அடையாளம் தந்தாரா! என்ன!

ஆஞ்சநேயர்:—இதோபாரும். (அங்குளீகம் தருகிறார்

சீதை:—சந்தோஷம். ஆ ஹா, பிராணபதி!

தரு.

ராராசுபாங்கா என்றமெட்டு.

கண்டேன் கணையாழி கண்ணூர மனமுமாத கன்

கண்களிலொற்றிக் கொண்டேன்
என் சிரசிலும் வைத்தேன் கண்
மன்னவரைக் கண்டதுபோல்
மங்கைமகிழ்ந்தேனே மேல் கண்

என்நாயகருக்கு இவ்வளவு பக்ஷமிருக்கிறதே அதுவேபோதும் தன்யளாகினேன் என் துயரம் ஒழிந்தது அப்பா! இன்னும் ஒருதிங்களுக்குள் என்னைவந்துமீட்டுக்கொண்டுபோகாவிடில் என் ஆவியிழப்பது மெய். சத்தியம் நீ சென்று அவர்பால் தெரிவி.

ஆஞ்சநேயர்:—அம்மா! என்முதுகின்மேல் ஆரோகணித்தால் அங்கு கொண்டுபோய் சேர்ப்பிக்கிறேன்.

சீதை:—இத்தலைவர்க்குப் பெருமையில்லை இந்தா இந்த சூடாமணியை அவரிடம் கொடுத்து நான் வளர்த்த கிளிபிள்ளைக்கு இளையமாமியார் பெயர்வைத்ததும், என்னை இம்சித்த காகாசுரன் விஷயமும் ஞாபகமூட்டினதாயும் தெரிவி.

ஆஞ்சநேயர்:—மகாபாக்கியம்! தாயே! என் க்ஷுத்பாதையைத் தீர்க்கும்பொருட்டு இந்த கனிவர்க்கங்களையருந்த விடைதரவேண்டும்.

சீதை:—நல்லது அப்படியே செய். அப்பா மாருதி! இதுமுதல் உனக்கு எவ்விதமாகிய

தரு.

(ஷாஹேஹவாலா என்ற வர்ணமெட்டு)

ஆயுதங்களினாலும் எதனாலும்
அசுரர்முதலந்த சுரராலும்
தீயினாலும் தண்ணீராலும்
தீங்கெதுவும் நேரிடாமல்
பாங்குடனே வரமீந்தேன்
சிரஞ்சீவியாயென்றும் வாழ்வாய்
தரணிதனிலென்றும் வாழ்வாய் ஆ

அப்பா! எந்த ஆயுதங்களாலும், அசுரர், சுரர், நரர், தீ, ஜலம் மற்றவைகளாலும் தீங்குநேராதிருக்கவரந்தந்தேன்! நீ என்றும் சிரஞ்சீவியாய் வாழக்கடவாயாக மங்களமுண்டாகுக.

(மாருதி அசோகவனத்தைஅழிக்க அக்ஷயன் சேனைகளோடுவந்துமடிய இந்திரஜித்துவருதல்)

இந்திரஜித்:—அடே பச்சைக்குரங்கே! என்னடா துஷ்டத்தனம் செய்கிறாயே?

(கபரதரஹத் என்ற வர்ணமெட்டு)

ஆடாடா குரங்கே
 ஆட்டாதே யுன்வாலைநீ ஆ
தாறுமாறாக என் தம்பியைக்கொன்றவனே
கூரம்பால்வாட்டியே
 குத்தியே ரத்தம் சொரியும் ஆ

இதோபார் உன்னை என்னசெய்கிறேன்(பிரம்மபாசத்தாற்கட்டுதல்)
அடா வீரர்களே அந்தக்குரங்கைப் பிடித்துவாருங்கள்.

ஆஞ்சநேயர் தரு.

(மஞ்சுளிகர் குந்தள என்ற வர்ணமெட்டு)

ரஞ்சித சிங்கார கெம்பீரா
 ரகுகுல தீரா சுகுண ஓய்யாரா
 ராமச்சந்திரா ராக்ஷஸ சம்மாரா
 ரம்ய சீதா ரமணநாதா
 உம்மைநம்பினேன் உத்தமவேதா ரஞ்

10 வது சீன் தர்பார்.

இராவணன் தரு.

(திரிலோகமும் என்ற மெட்டு)

மூவுல கெலாம் புகழும்
 மூர்த்தி கீர்த்தி கேர்த்தி யானவனே மூ
தேவர்கட் கதி காரன்
யாவர்கட் கதி சூரன்
பாவலர்கட் கேயு தாரன்
பூவலர்க்கு மிகு தீரன் நானே மூ

அடே சேவகா! அந்தகுரங்கு எங்கே கொண்டுவந்தீர்களா என்ன!

இந்திரஜித்:—வந்தனம் பிதா! இதோ அந்த குரங்கு பாரும்.

20

## இராவணன் தரு.

(நில்லடா நில்லடா என்றமெட்டு.)

ஆரடா ஆரடா குரங்கே சீசீ ஆ
அஞ்சாமலே இங்கு வந்து
வஞ்சகமே செய்த பேயா ஆ

நீயொரு காட்டு பூச்சி
நில்லடா நில்லடா சீச்சீ
காயமனைத்தும் நாசஞ் செய்வேன்
கதற உதிரம் சொரியக் கொய்வேன் கா

அடே நீயார்! உன்னையார் அனுப்பினவர்?

ஆஞ்சநேயர்:—அடே இகிறப்படாமற்கேள்? முதலாவது உன்னை இன்னொன்று தெரிந்துகொள்ளவேண்டும். அதாவது,

## தரு.

அகாரகாரணத்துனே யென்றமெட்டு.

அரியகைலை யெடுக்கப்போய் அடங்கின ராவணனு
ஆறுலக்ஷங்கோடி யாயுள் அனைத்திட்ட ராவணனு அ
கஜங்கள் தந்தங்களொடித்த காதக ராவணனு
கார்த்தவீரியார்ச்சுனனால் கட்டுண்ட ராவணனு க
வாலிவாலில் கட்டுப்பட்டு வருந்தின ராவணனு
வைதேஹி மணம்போது வில்லடிபட்ட ராவணனு வா
அன்னைசீதையம்மனை அபகரித்த ராவணனு
அத்தனைராவணரில் நீயெந்த ராவணன் சொல்லு அ

ராவணன்:—அடா மூட வானரமே! வீணில்பேசினால் ஒழிவாய் உன் விஷயமென்ன தெரிவி?

## ஆஞ்சநேயர் தரு.

(அஞ்சாதே ஆதி யென்றமெட்டு.)

அடடா அடடா ராவணா அடா
அந்த ராமசாமி தூதனடா
அடடா அடடா அ

நெடுமரம் போலவே என கோயமர்ந்திருக்கும்
தடியா மடையா கொடியா பொடியா
கடைப்பிணமே அடித்திடாதே அ

1 2 3 4 5 6 7 8 9 10 அடே பத்து தலை ராவணா! சம்பரனை வதைத்து இந்திரனுக்கரசளித்த தசரதச்சக்ரவர்த்தி திருக் குமாரனாகிய,

தரு மோகனம்.

ஸ்ரீராமசாமி தூதனான் அடடா ராவணா
நானடா அனுமானடா ஸ்ரீ
பூமிக்குநீசாகிய புண்யவதியை அடடா
காமுகாவிட்டுவிடடா காரணமாகா அடடா ஸ்ரீ

அடே! தாடகை மாரீச சுபாகுக்களைக்கொன்று, கௌசிகர் யாகத்தைக்காத்து, கல்லைப் பெண்ணாக்கி சிவன் வில்லையொடித்து என் அன்னையை மாலையிட்டு உன்னை சிறையிட்ட கார்த்தவீரியார்ச்சுனனைக் கொன்ற பரசுராமனைவென்ற,

தரு (லோகாரி சன்ம என்றமெட்டு)

ஸ்ரீராமசாமி தூதனான் அடடா அடடா ராவணா ஸ்ரீ
ராக்ஷதப்பயலே ரகுபதி யனுப்பினரெனை
ரணதீரன் சுராதிபன் ராஜராஜனயோத்திபன்
ரகுகுலதிலகனும் ரசிகனுமிகு சுயன் ஸ்ரீ

அடே! கபந்தன் விராதனைக்கொன்று, பஞ்சவடியில் உன் தங்கை சூர்ப்பணகை மோகிக்க, காது மூக்கு மரிந்து கரன், தூஷணன் திரிசிரனைக் கொன்ற விஜயகோதண்டனான என் ஐயன்.

தரு (உலாபர்ரு யென்றமெட்டு)

ராமசாமி தூதனுண்டா ராக்ஷதப்பயலேகேளாய்
காமுகா அன்னையைவிடு காகுத்தன்பாதம்தொடடா.

அடே! ஐயனில்லாத சமயம்பார்த்து, என்அன்னையைத்திருடிவந்த களவாடிப்பயலே உன்னைவாலினாற்கட்டி தொங்கவிட்ட வாலியைக்கொன்று, சுக்ரீவருக்கு பட்டங்கட்டின மகாபிரபுவிடம்

அன்னையைவிட்டு சரணமடைகுவாயேல்சிலகாலம் வாழ்வாய் இல்லையேல் உன்குலம் அடியோடொழியும்.

ராவணன்:—அடேகுரங்கே! சேஷ்டை செய்யாதே, அடே இந்தகுரங்கைபிடித்து வெட்டிவிடுங்கள்

விபீஷணர்:—நில்லும் அண்ணா! அவசரப்படாதீர், தூதுவந்தவர்களைக்கொல்லலாமா? விட்டுவிடும்.

ராவணன்:—ஆனால் இதன்வாலில் கந்தைதுணிகளைசுற்றி எண்ணெயைகவிழ்த்து கொளுத்தி துரத்திவிடுங்கள்.

(சபை கலைகிறது)

**11-வது சீன் வீதி**

ஆஞ்சநேயர் தரு.

சாமியேனை வெறுப்பது என்றவர்ணமெட்டு.

ரகுகுலதிலகாயென்னை ரக்ஷிப்பாயே
அகிலாண்டநாயகா அனுதாரசூகா
அவஸ்தை நேராமற்காகும் ஐயனே ஐயனே ஐயனே ரகு
பகவானே, ஸ்ரீராமப்பிரபு! அம்மணியெனக்கு யாதொரு அபாயமும்
நேரிடாமல் காக்கவேண்டும் ராம் ராம்.

(அரக்கர்கள் வாலைக்கொளுத்திவிடுகிறார்கள்)

ஆஞ்சநேயர் தரு.

மானைப்பிடி என்ற வர்ணமெட்டு.

லங்கையை எரிக்கிறேன்
அங்கங்கே முறிக்கிறேன்
பங்கமே செய்கிறேன் பார் பார் பார்
தங்கும் மாடி மேடை
எங்கும் பொடியாக
இங்குமே தீ வைத்தேன் பார் பார் பார் லங்
நாராயணசாமி பாராயணம்பாடி
பூராவெதிர்த்திட்டேனே நான் நான்
சீராய்ச் செல்குவேனே நான் நான் நான் லங்
(லங்காபுரியெல்லாம் எரிந்து பஸ்மீகரமாகிறது)

# லங்காதஹனம்.

## ஆஞ்சநேயர்த்யானம்.

### ஸ்ரீராமநாம ராமாயணம்.

சுத்த ப்ரஹ்ம பராத்பர ராம்
காலாத்மக பரமேஸ்வர ராம்
சேஷதல்பஸுக நித்ரித ராம்
ப்ரஹ்மாத்யமர ப்ரார்த்தித ராம்
சண்டகிரணகுல மண்டன ராம்
ஸ்ரீமத் தசரத நந்தன ராம்
கௌஸல்யாஸுத வர்த்தன ராம்
விஸ்வாமித்ர ப்ரியதன ராம்
கோர தாடக காதக ராம்
மாரீஸாதி நிபாதக ராம்
கௌஸிகமக ஸம்ரக்ஷக ராம்
ஸ்ரீமதஹல்யோத்தாரக ராம்
கௌதமமுனி ஸம்பூஜித ராம்
ஸுரமுனிவரகண ஸம்ஸ்துத ராம்
நாவிகதாவித ம்ருதுபத ராம்
மிதிலாபுர ஜன மோதக ராம்
விதேஹ மானஸ ரஞ்ஜக ராம்
த்ரியம்பககார்முக பஞ்சக ராம்
ஸீதார்பிதவர மாலிக ராம்
க்ருதவைவாஹிக கௌதுக ராம்
ராமராமஜெய ராஜா ராம்
ராமராமஜெய ஸீதா ராம்

மங்களம்.

(ஆஞ்சநேயர் ஸ்ரீராமநாமத்தை தியானித்துக்கொண்டே ரகுபதியிடம் செல்கிறார்)

ஸ்ரீமத் ராமாயணம் லங்காதஹனம்.

ஸம்பூரணம்.

---

## குன்மரோக சம்ஹாரி.

குன்மம் 8-விதம் அதிக எப்பம், மலபந்தம், வயிர் இரைந்தது போலிருத்தல், துர்ப்பலம், குடலிரைச்சல், வயிற்றில் அறுப்பதுபோ சலோடு உப்பிசம், வயிர்நோதல், வாந்தியாகுதல் அன்னம் உண்டால் வயிர்நோதல், விலாவில் நோதல், புளியேப்பம், மூர்ச்சை, வயிர் புண்ணாயிருத்தல், சூலைநோய், மார்பு நோய், வயிற்றில் கட்டி திரளல் முதலிய அநேகவிதமாய் காணப்படும். இந்த ரோகங்களை எமது மருந்து சாப்பிட்ட 20-தினத்திற்குள் ஆச்சரியப்படும்படி சந்தேகமின்றி குணப்படுத்துவதில் நிகரற்றதாய் இருக்கிறது பரீக்ஷிக்கவும்.

20-நாள் மருந்தடங்கிய டப்பி ரூபா 2 0 0

அநேக யோக்கியதா பத்திரங்கள் பெற்ற

## சந்தான சிந்தாமணி.

சில ஸ்திரீகள் வீட்டு விலக்கம் ஆகும்போது பொறுக்க முடியாத வயற்றுநோயால் படுக்கையாவது யாவருக்கும் தெரிந்த விஷயமல்லவா அதிகாரணம் யாதெனில் சில புழுக்கள் வயிற்றில் இருந்துகொண்டு கெர்ப்பப்பையில் ஏற்படக்கூடிய இந்திரியங்களை புசித்துக்கொண்டும் அவ்விந்திரியமானது மாறிப்பருவமடை ஆகும் காலத்தில் மேற்படி புழுக்களானது மாம்சத்தை பிடுங்குவதாலே பொறுக்கமுடியாத நோய் சம்பவிப்பதல்லாது கர்ப்பம்தங்க காரணமில்லை இதைப்பற்றியே யாம் ரொம்பவும் கஷ்டப்பட்டு இத்தேவதா சக்தி அமைந்துள்ள சந்தான சிந்தாமணி என்னும் ஔஷதத்தை முடித்திருக்கிறோம். இம்மருந்தை எமது பத்தியவிதிப்படி சாப்பிடும் பக்ஷத்தில் வயிற்று நோயானது நீங்கி மறு பருவமடைக்கு கட்டாயம் கர்ப்பந்தரிக்கும், அப்படி கர்ப்பம் தரிக்காவிடில் பணத்தை வாபீஸ் செய்யப்படும்.

20-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு ரூபா 3 0 0

## சுகபேதி மாத்திரை.

தேகதிடத்திற்கும் வயதிற்கும் தக்கபடி இம்மாத்திரையில் 2-முதல் 4-மாத்திரைகள் ராத்திரியில் எடுத்து காலை 6-மணிநேரத்திலாகுதல் சாப்பிட்டு கொஞ்சம் ஜலம் குடிக்கவேண்டியது. காலை 8-மணிக்குள் சுகமாய் பேதியாய்விடும். ரசஞ்சாதம் சூப்புசாதம் முதலிய ஆகாரங்கள் சாப்பிடலாம். இம்மாத்திரைகளை கைக்குழந்தை முதல் எல்லோருக்கும் உபயோகிக்க சுகமுண்டாகும். அஜீரணம் பித்த உபத்திரவங்கள், சகல வாய்வு மலச்சிக்கல், அக்கினி, மந்தம் வாதம் இடுப்பு கைகால் முதலிய ரோகங்களை சொஸ்தமாக்கும். 50-மாத்திரை அடங்கிய டப்பி 1-க்கு 0 8 0

---

டி. சாரதா புத்தகசாலை,

நெ. 23, பாளையப்பன் தெரு, மிண்ட் ஸ்டிரீட், மதராஸ்.

# டி. சாரதா புத்தக சாலையில்

## தயாராய் இருக்கும்

# புஸ்தக விளம்பரம்.

| வயித்திய தினுசுகள். | ரூ. | அ. | சோதிட தினுசுகள். | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| போகர் 7000 பாடல் | 4 | 0 | மணிகண்டகேரளம். | 0 | 8 |
| கொங்கணர் வைத்தியகாண்டம்500 | 0 | 8 | வால்மீகர் ஆருடம் மூலமும்உரை | 0 | 3 |
| போகர் 700-பாடல் | 0 | 10 | சப்தரிஷி வாக்கியம் 1000-பாடல் | 0 | 12 |
| போகர் ஜெனனசாகரம் | 0 | 12 | | | |
| போகர் சரக்குவைப்பு 800 | 0 | 14 | சாதக சிந்தாமணி | 2 | 0 |
| உரோமரிஷி வயித்தியம் 500 | 0 | 10 | மங்களேஸ்வரியம் | 2 | 0 |
| அகஸ்தியர் வயித்தியகாவி-1500 | 1 | 0 | ஜாதகபாரிஜாதகம் | 0 | 10 |
| அநுபோக வயித்திய அகாதி | 1 | 0 | சாதகஅலங்காரம் மூலம் | 0 | 12 |
| நாடிசாஸ்திரம் | 1 | 0 | டை. மூலம் உரையுடன் | 2 | 0 |

## டிராமா தினுசுகள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சதி-அநுசூயா | 0 | 4 | ஞானசவுந்தரி | 0 | 4 |
| டை. இரண்டாவது | 0 | 4 | அல்லி அர்ஜுன | 0 | 4 |
| லவகுச சரித்திரம் | 0 | 4 | டை. இரண்டாம் பாகம் | 0 | 4 |
| டை. இரண்டாவது | 0 | 4 | [illegible] | 0 | 4 |
| கோவலன்-கண்ணகி | 0 | 4 | டை. இரண்டாம்பாகம் | 0 | 4 |
| டை. இரண்டாவது | 0 | 4 | வள்ளி சரித்திரம் | 0 | 4 |
| பாரிஸ் சகுந்தலா | 0 | 4 | பாரிஸ் மதிவல்லபமோகனை | 0 | 4 |
| பாரிஸ் லங்காதகனம் | 0 | 4 | டை. திருப்புகழ் வர்ணமெட்டு | 0 | 3 |
| கெஜேந்திர மோக்ஷம் | 0 | 4 | சத்தியவான் சாவித்திரி | 0 | 4 |
| அதிரூபஅமராவதிமுதல்பாகம் | 0 | 4 | சத்ருண சாவித்திரி | 0 | 3 |
| டை. இரண்டாம்பாகம் | 0 | 4 | தசாவதார சரித்திரம் | 0 | 6 |

## பல தினுசுகள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பழனியாண்டவர் காவடிசிந்து | 0 | 4 | தத்துவகட்டளை | 0 | 1 |
| பகவத்கீதை பாக்கெட் சைஸ் 18-அத்தியாயங்கள் படங்களுடன் | 0 | 8 | ஸ்ரீவேதாந்தபக்திசிந்தாமணி | 0 | 4 |
| | | | விராலிமாலை | 0 | 1 |
| டை. கலிகோ பயின்டு | 0 | 10 | சடாக்ஷரமாலை | 0 | 1 |
| டை. பெரியது வசனம் | 1 | 8 | ஆண்டாள் திருப்பாவை | 0 | 3 |
| டை. இரத்த சலோகம் தமிழ் அர்த் கட்டளை கொத்து | 1 | 0 | மகாத்மாகாந்தி வந்தேமாதரம் கதர் கும்மிபாட்டு | 0 | 1 |
| டை. இமேசு | 1 | 8 | சிமைந்தன் கதர் திண்ணி சண்டை | 0 | 1 |
| காணுஜ்வவாத கட்டளை வசனம் | 0 | 1 | பார்பாப்பு என்றும்கொண்டிசிங் | 0 | 1 |
| டை. மூலமும் விசேஷ விருத்தி உரை 3-படங்களுடன் | 0 | 8 | சங்கீதபாலவித்தியாபோதினி | 0 | 12 |
| | | | மருமைமோகனன் | 0 | 8 |

T. சாரதா புத்தகசாலை,

நெ. 23, பாலையப்பன் தெரு, மின்ட், பின்டின் போஸ்டு மதராஸ்.